தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 5 மே – 2017 ₹1.00


## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி ஆலோசகர் வருகை



வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் மத்திய புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கூடுதல் செயலர் மற்றும் நிதி ஆலோசகர் திரு. சுனில் குமார் சிங் அவர்கள் 04.05.2017 அன்று பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்து, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் கட்டப்பட்ட தேர்வுக் கூடம், அசைபோடும் விலங்குகளுக்கான அவசரச் சிகிச்சைப் பிரிவு, சிறிய பிராணிகள் குறித்த செயல்வழிக் கற்றல் அவசரச் சிகிச்சைப் பிரிவு, புதுப்பிக்கப்பட்ட சிறிய பிராணிகளுக்கான உள்ளுறை சிகிச்சைப் பிரிவு, வெளிநாடுவாழ் இந்திய மாணவர் விடுதி, சுகாதார மையம் மற்றும் உள் விளையாட்டரங்க அறை ஆகியவற்றைப் பார்வையிட்டார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பல்கலைக்கழகப் பணிகள் மற்றும் வேளாண் சமூகத்தினர்க்குப் பல்கலைக்கழகம் அளிக்கும் சேவைகள் குறித்து விளக்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வல்லுநர் குழு பார்வையிடல் மற்றும் பி.டெக் கோழியினத் தொழில்நுட்பப் பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம்



மைசூரு, ஸ்ரீ ஜெயசாமராஜேந்திர பொறியியல் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் எம்.சி. நடராஜா அவர்கள் தலைமையில் மத்திய பிரதேசம், ஜிவாஜி பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் நவ்நீத் காரூட், பெங்களூரு, கேஓடி ஆர்க்கிடெக்டின் இயக்குநர் திரு. உன்னி கிருஷ்ணன் காடோத் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் வல்லுநர் குழு 21.04.2017 அன்று ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிக்கு வருகைபுரிந்து, பி.டெக் (கோழியினத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பிற்கு அங்கீகாரம் வழங்குதல் பொருட்டுக் கல்லூரியில் அமைந்துள்ள கல்வி மற்றும் நிரந்தர உள்கட்டமைப்புகளை ஆய்வு செய்தது. கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் கல்லூரியின் பல்வேறு பணிகளைக் குழுவிற்கு விரிவாக எடுத்துரைத்தார். இதன் தொடர்ச்சியாக ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் வழங்கப்படும் பி.டெக் கோழியினத் தொழில்நுட்பப் பட்டப்படிப்பிற்கு அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

## ஆறாவது கால்நடை உற்பத்திக் குழுக் கூட்டம் – 2017




பல்கலைக்கழகத்தின் ஆறாவது கால்நடை உற்பத்திக் குழுக் கூட்டம் 25.04.2017 அன்று திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து "வேளாண் காடு வளர்ப்பு மற்றும் விலங்கினத் தீவனத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள்" மற்றும் "வறட்சிக் காலங்களில் கால்நடைத் தீவன மேலாண்மை" என்ற இரு தமிழ்ப் புத்தகங்களையும், கால்நடை மற்றும் கோழிகளுக்கான அடர் தீவனத் தயாரிப்பு குறித்த இரண்டு குறுந்தகடுகளையும் வெளியிட்டார். பேராசிரியர் மற்றும் தலைவரும் கால்நடை உற்பத்திக் குழுவின் உறுப்பினர் செயலருமான முனைவர் த. சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் மற்றும் கால்நடை உற்பத்திக் குழுவின் தலைவர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் கடந்த குழுக் கூட்டத்தின் பரிந்துரையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நிறைவுற்ற, நடப்பிலுள்ள மற்றும் புதிய ஆராய்ச்சித்

திட்டங்கள் குறித்து விளக்கியுரைத்தார். பல்கலைக்கழக முன்னாள் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு, பெங்களூரு, தேசியப் பால்வள ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர் கே.பி. ரமேஷா, ஈரோடு பிரிவு தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத் துணைப் பொது மேலாளர் திரு. க. வேலுசாமி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றுக் கருத்துகளைத் தெரிவித்தனர். பல்கலைக்கழக அதிகாரிகள், நியமன உறுப்பினர்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவுத் துவக்கம்



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையில் மாதிரி மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப் பிரிவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 25.04.2017அன்று துவக்கிவைத்து, பசுந்தீவனப் பற்றாக்குறையைப் போக்க இத்தகைய தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்துவதன் தேவை குறித்து வலியுறுத்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு, பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார், கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா. செல்லபாண்டியன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### குளிரூட்டப்பட்ட புதிய பேருந்து துவக்க விழா




திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூபாய் 27.84 இலட்ச மதிப்பில் புதிய குளிரூட்டப்பட்ட பேருந்து வாங்கப்பட்டுள்ளது. இப் பேருந்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 25.04.2017அன்று கொடியசைத்துத் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### கல்வி நிலைய அருங்காட்சியகம் – திறப்பு விழா

நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் அருங்காட்சியகத்தை 29.04.2017அன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர்



அவர்கள் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### உலகக் கால்நடை மருத்துவ தினம்

**சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி:** கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் கால்நடை மருத்துவ முகாம் பந்திகாவனூர் மற்றும் புலியூர் கிராமங்களில் 29.04.2017அன்று நடத்தப்பட்டது. முகாமில் மொத்தம் 120 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. தனுவாஸ் தாதுப்புக் கலவை கறவை



மாட்டுப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. வெள்ளைக் கழிச்சல் நோய்க்கு எதிராக வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து போடப்பட்டது. மொத்தம் 10 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் முகாமில் பங்கேற்றனர்.

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரிமூலம் “செல்லப் பிராணிகளுக்கான இலவச நோய்ப் பரிசோதனை முகாம்” 24.04.2017 முதல்



28.04.2017வரை கால்நடைச் சிகிச்சை கற்பிக்கும் வளாகத்தில் நடைபெற்றது. முகாமில் 100க்கும் மேற்பட்ட செல்லப் பிராணிகளுக்குப் பல்வேறு நோய்களுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் 28.04.2017அன்று நடைபெற்ற “மக்காத நெகிழிக் (பிளாஸ்டிக்) கழிவுகள்” குறித்த விழிப்புணர்வுப் பேரணியின்போது மக்காத நெகிழிக் கழிவுகள் அகற்றப்பட்டு, அவை குறித்த துண்டுபிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், பொதுமக்கள் மீது கால்நடை மருத்துவர்களுக்கான பரிவைக்

காட்டும் வகையில் இளநகரில் உள்ள முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு 29.04.2017அன்று பழங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் பங்கேற்றார். உலகக் கால்நடை மருத்துவத் தினத்தை–2017 முன்னிட்டுக் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் “நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத்தன்மை கண்காணிப்பு” பற்றிய குறுக்கெழுத்துப் போட்டி நடத்தப்பட்டது. இதில் இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்கள் 22 பேர் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குக் கல்லூரி முதல்வர் பரிசுகள் வழங்கினார்.

## வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சி



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வேலைவாய்ப்புப் பிரிவும் கல்விச் சிறப்புப் பிரிவும் இணைந்து, உள்ளுறை பயிற்சிக்குப் பதிவுசெய்திருக்கிற பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். (2012–13ஆம் சேர்க்கைப் பிரிவு) மாணவர்கள் மற்றும் இறுதியாண்டு (2013–14ஆம் சேர்க்கைப் பிரிவு) மாணவர்களுக்கு முறையே 19.04.2017 மற்றும் 27.04.2017ஆம் நாள்களில் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சியை நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப் குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் முன்னாள் மாணவர்களான தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் ர. ஆனந்தகுமார் இ.ஆ.ப., சேலம் மாவட்டம், சங்ககிரி வட்ட வருவாய்க் கோட்டாட்சியர் மருத்துவர் பால் பிரின்ஸிலி ராஜ்குமார், நாமக்கல் மாவட்ட வனத்துறை அலுவலர் மருத்துவர் ரா. காஞ்சனா ஆகியோர் சிறப்பு விரிவுரை ஆற்றினர். துறைத் தலைவர்கள் மற்றும் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## தொழில்நுட்பக் கருத்தரங்கு

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கரூர் மாவட்டத்தில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் நலன் கருதிக் “கால்நடைகளில் இனப்பெருக்கத் திறனை அதிகரிக்கச் சினைப்பருவத் தூண்டுதல் மற்றும் இயக்குநீர் (ஹார்மோன்) சிகிச்சை” குறித்த தொழில்நுட்பக் கருத்தரங்கை 10.04.2017அன்று ஏற்பாடு செய்தது. கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 32 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

## திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கோயம்புத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தொலைநிலைக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் “பால்பண்ணை உதவியாளர்” என்ற ஒரு மாத காலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை 13.03.2017 முதல் 18.04.2017 வரை நடத்தியது. பயிற்சியில் 10.04.2017 அன்று தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பங்கேற்று “வணிக முறையிலான கறவைமாடு வளர்ப்பில் இனப்பெருக்கத் தொழில்நுட்பங்கள்” குறித்து விரிவுரை ஆற்றிப்



பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடினார். பயிற்சியில் எட்டுப் பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## பயிற்சி




நாகர்கோவில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நாகர்கோவில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து “கறவை மாடு வளர்ப்பும் மதிப்புக் கூட்டிய பால் பொருள்களும்” குறித்த பயிற்சியை 20.03.2017 முதல் 27.03.2017 வரை நடத்தின. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 27 பட்டதாரிகள் பயிற்சியில் கலந்துகொண்டனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ஆர். சவான் இ.ஆ.ப. அவர்கள் பங்கேற்றுப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரை ஆற்றினார். நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. ஜெ. மார்டின் பிரகாசம், முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஆர். விஸ்வநாதன், நாகர்கோவில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவன இயக்குநர் திரு. ஏ. கீதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி



கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தத்தெடுப்பு கிராமங்களான பண்டுதகாரன் புதூர் மற்றும் ஜல்லிப்பட்டியில் “கிராம மகளிர் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு” பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை 28.04.2017அன்று நடத்தியது. கரூர், தாட்கோவின் மாவட்ட

மேலாளர் திருமதி வி. நவநீதம் அவர்கள் தாட்கோ வழங்கும் சுய வேலைவாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பற்றி விளக்கம் அளித்தார். கரூர், மகளிர் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர் திரு. குமாரசாமி அவர்கள் அரசின் திட்டங்கள் குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்குத் தனுவாஸ் தாதுப்புக்கட்டி மற்றும் மடிப்பிதழ்கள் வழங்கப்பட்டன. மொத்தம் 33 மகளிர் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 28.04.2017 அன்று பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேரிடர் காலங்களை எதிர்கொள்வது குறித்த செயல்முறை விளக்கம் தேசியப் பேரிடர் குழுவால் அளிக்கப்பட்டது. 110 மாணவர்கள் பங்கேற்றனர்.

### மாவட்ட ஆட்சியர் பார்வையிடல்

திருவண்ணாமலை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ள மாதிரி மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவை, மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் எம். வடநேரே இ.ஆ.ப. அவர்கள் 07.04.2017 அன்று பார்வையிட்டார். பயிற்சி மையத்தின் இணை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சா. தியோபிலஸ் ஆனந்த் குமார், உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. துரைராஜன் ஆகியோர் பசுந்தீவன உற்பத்தி முறைகளை மாவட்ட ஆட்சியரிடம் விளக்கினர்.

### விருது

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் செல்வன் டி.பி. கௌதம் மற்றும் ஆர். ராமகிருஷ்ணன் ஆகியோர் பெங்களூரு, நேச்சுரல் ரெமிடீஸ் மருந்து நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்ட "யங் நேட்சுரல் விங்க்ஸ் பருவம் –2" என்ற தேசிய அளவிலான கட்டுரைப் போட்டியில் இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளைப் பெற்றனர். மேலும், கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் பெ. செந்தில்குமார் அவர்கள் சிறந்த மாணவர்கள் வழிகாட்டுதல் விருதினைப் பெற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் 28.04.2017 அன்று மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

### பாவேந்தர் பாரதிதாசனின் 127ஆவது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் பல்கலைக்கழகத்தின் ஆறு கல்லூரி மாணவர்களிடையே பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 127ஆவது பிறந்த நாள் விழா 28.04.2017 அன்று கொண்டாடப்பட்டது. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழா 29.04.2017 அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத் தேர்வாணையர் மற்றும் சிகிச்சை இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தமது உரையில் பல்கலைக்கழக மாணவர்களில் தமிழ் மொழியில் திறமை வாய்ந்தவர்களை அடையாளங்காணும் வகையில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது என்றும் இந்த நோக்கத்திற்காகவே பல்கலைக்கழகத்தில் "பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை" நிறுவப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கவிதைத் திறன் மற்றும்



அவரின் சமூகப் பணி குறித்துச் சிறப்புரை ஆற்றினார். மேலும், போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். முன்னதாக, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடற்கூறியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கீதா ரமேஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியில் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் பா. மதுகேஸ்வரன் நன்றி கூறினார்.

### முதன்மையான பல்கலைக்கழக நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 11.04.2017 | : | பல்கலைக்கழக மேலாண்மைக் குழுக் கூட்டம் |
| 25.04.2017 | : | கால்நடை நோய் ஆய்வுக் குழுக் கூட்டம் |

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் புதுதில்லி இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பின் நிதியுதவியில் அலகாபாத், சாம் ஹிக்கின்போதம் வேளாண் தொழில்நுட்ப அறிவியல் பல்கலைக்கழகத்தில் 27.04.2017 மற்றும் 28.04.2017 ஆம் நாள்களில் நடைபெற்ற "இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களிடையே, வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் துறைகளில் வளங்களைப் பகிர்தல் – மாநில வாரியான விவசாய ஆலோசனைக் குழு அமைத்தல்" குறித்த 12ஆவது தேசியக் கருத்தரங்கில் பங்கேற்றார். மேலும், 27.04.2017 அன்று நடைபெற்ற "இந்தியாவில் வேளாண் ஆராய்ச்சியின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு – வாய்ப்புகள் மற்றும் அணுகுமுறைகள்" குறித்த தொழில்நுட்ப அமர்வின் இணைத் தலைவராகவும் செயல்பட்டார்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்குப் பேருரை விருது



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களுக்கு, கால்நடை உயிர்த் தொழில்நுட்பப் புலத்தில் அவர் ஆற்றிய சிறந்த சேவை மற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் 'பெருமைமிகு டாக்டர் பி. ரிச்சர்டு மாசிலாமணி

பேருரை விருது' 17.04.2017அன்று மகாராஷ்டிரா, ஷிர்வல், கிரந்திசிங் நானா பாட்டீல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற இந்தியக் கால்நடை நோய் எதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கத்தின் 23ஆவது ஆண்டு மாநாட்டில் வழங்கப்பட்டது. மாநாட்டில் துணைவேந்தர் அவர்கள் "உயிர்த் தொழில்நுட்ப அணுகுமுறைகள் மூலம் விலங்கின வழி விவசாயத்தைத் துரிதப்படுத்துதல்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கினார். இந்தியக் கால்நடை நோய் எதிர்ப்பியல் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியல் சங்கம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரான மறைந்த முனைவர் பி. ரிச்சர்டு மாசிலாமணி அவர்கள் பெயரில் இந்த விருதை உருவாக்கியுள்ளது.

### பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – 2017




பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சந்திப்பு–2017 சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 08.05.2017அன்று நடைபெற்றது. சந்திப்பில் பல்வேறு வயதைச் சார்ந்த 463 முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சந்திப்பிற்குத் தலைமை வகித்து உரையாற்றினார். சந்திப்பில் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்ற 94 வயதுடைய மருத்துவர் ஆர். உமாமகேஸ்வரன், 90 வயதுடைய மருத்துவர் ஆர். ராமகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர். மேலும், சந்திப்பில் பங்கேற்ற 75 வயதுக்கு மேற்பட்ட 65 முன்னாள் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் பி. மகாலிங்கம், கால்நடைப் பராமரிப்புத் துறையின் முன்னாள் கூடுதல் இயக்குநர் மருத்துவர் வி. குருமூர்த்தி, சென்னை இறைச்சிக்கூட நிறுவனத்தின்(தனியார்) இயக்குநர் மருத்துவர் பி. பக்தா ஆகிய மூவர்க்கு வாழ்நாள் சாதனையாளர் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டைச் சார்ந்த முன்னாள் மாணவரும் நியோஸ்பார்க் பார்மசூட்டிகல்ஸ் இயக்குநருமான மருத்துவர் எம். குமாரசாமி அவர்கள் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் இல்லத்தில் அறை ஒன்று கட்டுவதற்கு ரூபாய் 6.00 இலட்சத்திற்கான காசோலையைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களிடம் வழங்கினார். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் முனைவர் வி. அப்பாராவ் அவர்கள் முன்னாள் மாணவர் சங்க அறிக்கை அளித்தார். முன்னாள் மாணவர் சங்கத்தின் துணைத் தலைவர் மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 1986–87ஆம் ஆண்டை சேர்ந்த பி.வி.எஸ்சி. முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 29.04.2017அன்று நடைபெற்றது. சந்திப்பில் 42 முன்னாள் மாணவர்கள் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.




நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் பி. சதாசிவம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் முன்னாள் மாணவர் மற்றும் பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு உறுப்பினர் மருத்துவர் எம். சுந்தரலிங்கம், வருமான வரித் துறை ஆணையர் மருத்துவர் வி. விவேகானந்தன் இ.கு.ப. ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னாள் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களைக் கௌரவித்து, கருத்தரங்கு நடத்த ரூபாய் 40,000 நன்கொடை வழங்கினார்கள்.

### மாணவர் மருத்துவ நல முகாம்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மேம்பாட்டு நிதி–2016–17இன் நிதியுதவியில் மாணவர்களின் உடல்நலனைப் பேணவும் உரிய சிகிச்சைகள் அளிக்கும் வகையிலும் "மாணவர் மருத்துவ நல முகாமை" சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தியது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், ஓசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி ஆகியோர் முகாமில் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் விடுதி மாணவர்களின் முழுமையான இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டம் பயிலும் மாணவிகளுக்கு ஹீமோகுளோபின் அளவைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனை 12.04.2017அன்று நடத்தப்பட்டது.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பாகச் சிறப்பு

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Posted on 29.05.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
Editor : **Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411
E-mail : dde@tanuvas.org.in

முகாம் இராமசந்திரம் எனும் தத்தெடுக்கப்பட்ட கிராமத்தில் 31.03.2017 முதல் 06.04.2017 வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் கு. மணி அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். “வறட்சிக் காலத்தில் விவசாயம் மற்றும் கால்நடை மேலாண்மை” என்பதை முன்னிறுத்திச் சிறப்பு முகாமும் நடத்தப்பட்டது. முகாமில் போலியோ சொட்டு மருந்து போடுதல், யோகாப் பயிற்சி, சிறந்த முறையில் சொட்டு நீர்ப் பாசனத்தைக் கையாளும் நுணுக்கங்கள் பற்றிய



விழிப்புணர்வு, மரக்கன்று நடுதல், கோழிகளுக்குத் தடுப்பூசி போடுதல், கால்நடைக்குச் சிகிச்சை, தீயணைப்புச் செயல்விளக்கம், துவக்கப் பள்ளிக் கட்டடத்திற்கு வெள்ளையடித்தல் ஆகியன செயல்படுத்தப்பட்டன. மொத்தம் 23 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.

- உலகப் புவி நாளை–2017 முன்னிட்டு ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம்மூலம் தத்தெடுக்கப்பட்ட ஒரத்தநாடு நெடுவாக்கோட்டை கிராமத்தில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி 20.04.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, உலகப் புவி நாள் போட்டிகளில் வென்ற அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். பள்ளி மற்றும் கோவில் வளாகங்களில் கூண்டுகளுடன் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## பணி ஓய்வு



பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநரகத்தின் நிர்வாக அலுவலர் செல்வி எஸ். பசுபதி ராஜம் அவர்கள் 30.04.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 24.04.1959இல் பிறந்த இவர், மொத்தம் 33 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடலியங்கியல் துறையின் உதவியாளர் திரு. ஒய். புஷ்பராஜ் அவர்கள் 30.04.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 11.04.1959இல் பிறந்த இவர், மொத்தம் 25 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையின் உதவியாளர் திரு. கே. ராமலிங்கம் அவர்கள் 30.04.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 06.04.1959இல் பிறந்த இவர், மொத்தம் 21 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருச்சி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் ஆய்வக உதவியாளர் திரு. எம். மணி அவர்கள் 30.04.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 13.04.1959இல் பிறந்த இவர், மொத்தம் 31 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. என். கன்னியப்பன் அவர்கள் 30.04.2017அன்று பணி ஓய்வு பெற்றார். 03.04.1957இல் பிறந்த இவர் மொத்தம் 19 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்